செய்தி வெளியீடு எண் : 673 நாள் : 08.04.2023

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி சென்னை துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வால்டாக்ஸ் ரோட்டில் அமைந்துள்ள பழைய நாடகக் கொட்டகையை சி.எம்.டி.ஏ நிதியில் புதிய திருமண மண்டபம் அமைப்பதற்கு தேர்வு செய்ய

## மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் ஆய்வு

*******

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** வழிகாட்டுதலின்படி இன்று (8.4.2023) மாண்புமிகு சென்னை பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் சென்னை துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வால்டாக்ஸ் ரோட்டில் அமைந்துள்ள பழைய நாடகக் கொட்டகையை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும நிதியில் புதிய திருமண மண்டபம் அமைப்பதற்கான இடத்தினை தேர்வு செய்வதற்கு கள ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து சென்னை துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தண்ணீர் தொட்டி தெருவில் அமைந்துள்ள பழைய மலேரியா மருத்துவமனையை அகற்றிவிட்டு அந்த இடத்தில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும நிதியில் புதிய டயாலிசிஸ் மையம் மற்றும் மாற்றுத்திறனாளிக்கான சிறப்பு சிகிச்சை மையம் அமைப்பதற்கான இடத்தினையும் மற்றும் அண்ணா பிள்ளை தெருவில் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தினையும் கள ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு. எம். சிவகுரு பிரபாகரன்,இ.ஆ.ப., சி.எம்.டி.ஏ தலைமை திட்ட அலுவலர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, இராயபுரம் மண்டல அலுவலர் திரு.ஜி.தமிழ்செல்வன், செயற்பொறியாளர் திரு.லாரன்ஸ், மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in